தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் &
உதவிப் பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 9-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் தொழில்துறை வேலைவாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு இளங்கலை தொழில்நுட்பத்தில் எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் மாணவர்கள் மேலும் உணவு பதன்படுத்துதல் பொறியியல் மாணவர்கள் தங்களுடைய பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக 8-ம் பருவத்தில் 80 நாட்கள் தொழில்துறை வேலைவாய்ப்பு பயிற்சி பெறுகின்றனர். இதன் பொருட்டு மரபுசாரா எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் உணவு பதப்படுத்துதல் துறை சார்ந்த இந்தியாவிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

இப்பயிற்சியின் போது மாணவர்கள் 80 நாட்களும் தொழிற்சாலைகளிலேயே தங்கி பயிற்சிபுரிகின்றனர். பயிற்சியில் தொழிற்சார்ந்த பிரச்சனைகளை அறிந்து அவற்றிற்குரிய தீர்வுகளையும் வழங்கினார்கள். மேலும் மாணவர்கள் தொழிற்சாலைகளில் கற்றறிந்த தொழில்நுட்பங்களை மாதிரி வடிவங்களாகவும் ஆவணப்படங்களாகவும் 8-4-2015 அன்று பிற்பகல் 2.30 முதல் 6.00 மணியளவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பூங்கா-3ல் காட்சிபடுத்தினர். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தின் துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்கள் இத்தகைய நிகழ்வு நடப்பதற்குத் தூண்டுதலாக இருந்ததுடன் மாணவர்களைப் பெரிதும் ஊக்கப்படுத்தினார்.

வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர். C.R. அனந்தகுமார் அவர்கள் தொழில்துறை பொருட்காட்சியைத் துவக்கி வைத்து மாணவர்களுடன் வேலைவாய்ப்பு குறித்து கலந்துரையாடினார்.

வேளாண் பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர். C. திவாகர் துரைராஜ் அவர்கள் இந்த ஆண்டு படித்து முடித்துச் செல்லும் மாணவர்களை அவர்கள் சிறந்த முறையில் தொழில்துறை வேலைவாய்ப்பு பயிற்சியினை முடித்தமைக்காகவும், பல்வேறு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்ற 43 மாணவர்களையும், தேசிய மற்றும் உலகளாவிய சிறந்த கல்வி நிறுவனங்களில் மேற்படிப்பிற்கான அனுமதி பெற்ற 25 மாணவர்களையும் மிகவும் பாராட்டினார். மேலும் படித்துக்கொண்டிருக்கும் மற்ற இளநிலை மாணவர்கள் இந்தியாவிலுள்ள தொழில் நிறுவனங்கள் மற்றும் பயிற்சி பற்றிய விவரங்களை இந்த பொருட்காட்சியைப் பார்த்து பயன்பெற்றனர்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்